**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - 2021**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து ஆணைக்குழுவின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

---

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு

வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.5.2 இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய தரத்தின் தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இல் 55 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்விற்கான ஆண்டில் மீள்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருந்த 11 மோட்டார் வாகனங்களுக்கு ஏற்புடையதான மீள்கணிப்பீட்டு பெறுமதிக்ககைமவாக, கணக்கீடு செய்யப்பட்ட ரூபா.4,047,630 ஆன தேய்மானப் பெறுமதி மீள்கணிப்பீடு மிகையில் மீண்டும் வருமானத்திற்கு அடையாளம் காணப்பட்டதன் காரணமாக, மீளாய்விற்கான ஆண்டில் மிகை மற்றும் மீள்கணிப்பீட்டு பெறுமதி அதற்கு சமமான பெறுமதியில் ஒழுங்குமுறையில் அதிகமாகவும் குறைவாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு ஐயப்பாட்டில் உத்தேசம் செய்துள்ளவாறு, மீள்கணிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான கடன்தீர்ப்பாக வருமானத்தில் அடையாளம் காணப்பட்ட ரூபா.4,047,630 தொகை திரட்டிய மிகை அல்லது பற்றாக்குறைக்கு சீராக்கப்பட்டு கணக்குகளை செவ்வையாக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.1,086,309 ஆன மோட்டார் வாகனங்களின் தேய்மானம் முன்னரான ஆண்டின் இலாப-த்தில் சீராக்கல் வேண்டு-மாயினும், அது மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கண-க்கு வைக்கப்பட்டதன் கார-ணமாக ஆண்டின் மிகை அதற்கு சமமான பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்படுதல் | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் 2021 ஆம் ஆண்டில் தேய்மா-னமாக செலவினத்திற்கு அடை-யளாம் காணப்பட்ட CAF – 6096 இலக்க மோட்டார் வண்டிக்கு ஏற்படையதாக ரூபா.1,086,309/- தொகை, 2022 ஆண்டில் திரட்டிய மிகை அல்லது பற்றாக்குறையாக சீராக்கப்பட்டு மீதி செவ்வையா-க்குவதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளப்படும். | முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதான தேய்-மான செலவினம், முன்னரான ஆண்டின் சீராக்கப்படுதலாக கவனத்தில் கொண்டு பணியாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் மோட்-டார் வாகனங்களின் பரிமாற்ற இலாபம் ரூபா .42,500,000 ஆயினும், அது ரூபா.1,257,534 ஆக வருமானத்தில் அடை-யாளம் காணப்பட்டமை கார-ணமாக ரூபா.41,242,466 ஆல் மீளாய்விற்கான ஆண்டில் மிகை குறைவாகவும் வாகனங்களின் பரிமாற்ற இலாபம் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு மிகச் செவ்வையாக, இந்தப் பெறுமதி-யானது பிற்போடப்பட்ட வரு-மானக் கணக்கிலிருந்து, மீள்-கணிப்பீட்டு வருமானக் கணக்-கிற்கு மாற்றப்பட்டு கணக்குகளை செவ்வையாக்குவதற்கு இணங்குகின்றேன். | வாகனம் பரிமாற்றம் செய்கையில் எழுந்து-ள்ள மீள்கணிப்பீட்டு மிகை, பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் மீள்கணிப்பீட்டு வரு-மானக் கணக்கில் மாற்றுவதற்கு நடவடி-க்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 கிடைக்கப்பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**1.6.1 கிடைக்கப்பெ வேண்டிய தொகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2009 ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் ஆணைக்குழுவால் பட்டநிலை பின்படிப்பு கற்கைக்காக 416 பேர் பொருட்டு ரூபா.மில்லியன் 725.6 தொகை வழங்கப்படினும், அதில் 143 பேர் பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி கற்றலை இரத்துச் செய்திருந்தனர். பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி இரத்துச் செய்திருந்த 14 பதவியணி அங்கத்தவர்கள் பதவி வெறித்தாக்கியதன் காரணமாக அவர்களிடம் வழங்கியிருந்த ரூபா.மில்லியன் 24.04 ஆன அளிப்புகள் 05 ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகள் வரையிலான காலம் சென்றிருந்த போதிலும் மீண்டும் அறவிடுவதை மீளாய்விற்கான ஆண்டில் தவறவிடப்பட்டிருந்தது. | 2009 ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரை 421 பட்டநிலை பின்படிப்பு அளிப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கிடையில் 143 அளிப்புகள் பல்வேறு காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டிருந்தது.<br><br>அதன்படி 2020 - 2009 ஆண்டு வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின், அளிப்பு நிதியம் பயன்படுத்தி பட்டநிலை பின்படிப்பு கற்கை பொருட்டு 273 பேர் மட்டும் பங்குபற்றியுள்ளனர். | பட்டநிலை பின்படிப்பு மாணவர்கள் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை பூர்த்தி செய்யப்படுவதாக பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், பட்டப்படிப்பு கற்கைநெறிகளை இரத்துச் செய்து, கற்கைநெறிகளை விட்டுச் சென்றுள்ள பதவியணி உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தொகையினை துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. மில்லியன் 9.5 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.மில்லியன் 29.9 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.மில்லியன் 20.4 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீண்டுவரும், வழங்கல் மற்றும் நுகர்வு, ஏனைய செலவினங்கள் அதிகரித்தல் பிரதான காரணங்களாகின.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செலிநெறி பகுப்பாய்வ**

மீளாய்விற்கான ஆண்டில் அரசாங்கத்தின் அளிப்புகள் மற்றும் வேறு வருமானங்களின் மொத்தம் ரூபா.மில்லியன் 2929.7 தொகையானது, கடந்த ஆண்டின் அரசாங்க அளிப்புகள் மற்றும் வேறு வருமானங்களின் மொத்தம் ரூபா.மில்லியன் 2819.3 உடன் ஒப்பிடுகையில் ரூபா.மில்லியன் 110.4 அதாவது 3.9 % ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமைக்கு பிரதனா காரணம், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக வேறு வருமானங்களின் அதிகரிப்பாகும். அதேபோன்று மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு செலவினம் ரூபா. மில்லியன் தொகை 2920.2 முன்னரான ஆண்டின் தொழில்பாட்டு செலவினம் ரூபா.மில்லியன் 2789.4 உடன் ஒப்பிடுகையில் ரூபா.மில்லியன் 130.8 அதாவது 4.7% அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவால் 2017 ஆம் ஆண்டில் மாதாந்த வாடகையாக ரூபா.350,000 இற்கு பெற்றுக்கொண்டிருந்த சதுர அடி 3,337 ஆன கட்டிடத்தின் இடவசதி போதுமற்றதாலும், போக்குவரத்து சிரமங்கள் காரணமாகவும் குறித்த குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு இலக்கம் 24 A, வோட் ப்ளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள சதுர அடி 7,000 ம் கொண்ட கட்டிடம் ரூபா.950,000 ஆன மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக தேசிய வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் அந்த அனுமதிக்கு முரணாக மாதாந்த வாடகை ரூபா.350,000 ஆன வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யாது புதிய கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.4,200,000 ஆன மேலதிக தொகை கட்டிடங்களின் வாடகையாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கட்டிடத்தில் பராமரிக்கப்பட்ட மற்றும் புதிதாக ஏற்படுத்திய சில பிரிவுகள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்ட பின்னர், அதற்கு முன்னராக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த கட்டிடத்தல் தாபிக்கப்பட்டிருந்த பிரிவுகள் புதிய கட்டிடத்தில் தாபிப்பதற்கு இடவசதி போதுமற்றதால் அந்த பழைய குத்தகை உடன்படிக்கையும் அகற்றப்படாது பராமரிக்க வேண்டி ஏற்பட்டது. எவ்வாறெனிலும், இது தேசிய தேவைப்பாடு கருதி மிக பயனுள்ள சேவை வழங்கும் நோக்கில் மேற்கொண்டதாகும். | முன்வாடகை உடன்படிக்கை அகற்றப்பட்டு புதிய வாடகை உடன்படிக்கை மேற்கொள்ளும் அடிப்படையில் தேசிய வரவு செலவு பணிபாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 தொழில்னபாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016/2017 கல்வி ஆண்டு தொடக்கம் 2019/2020 கல்வி ஆண்டு வரையிலான காலப்பகுதி பொருட்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக- | ஒவ்வொரு கற்கை ஆண்டிலும் மாணவர்களை அனுமதிக்கையில் பல்வேறு கற்கைநெறிகளில் ஏற்படும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்த மட்டம் வரை குறைக்கப்பட்டு, |

| | | | |
|---|---|---|---|
| | கையில் 192 தொடக்கம் 220 இடையிலான எண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்படினும், அந்த வெற்றிடங்களுக்காக மீண்டும் மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக 798 மாணவர்களின் பொருட்டு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறவில்லை. | வெற்றிடங்களை, 07 சுற்றுகளில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆகக்கூடியதாக மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 08 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழுவில், கல்வி பொது தராதர சான்றிதழ் (உ.த) சித்தியடைந்த பல்கலைக்கழக அனுமதி பொருட்டு உள்ள விண்ணப்பத்தாரிகளிடம் ஆகக்கூடிய வாய்ப்பு ஏற்படும் வகையில் தகவுத்திறன் பரீட்சை நடாத்தும் கற்கைநெறிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்படுவதற்கு பரிந்துரை செய்திருந்த போதிலும், இவ்வறிக்கையின் திகதி வரை பரிந்துரைகளை செயற்படுத்தவில்லை. | தகவுத்திறன்/ செய்முறை பரீட்சை நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்காக தகைமைகளை பெறுவதற்கு, குறித்த பரீட்சையின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த கலந்துரையாடல்கள் ஊடாக ஏற்புடைய கல்வி கற்கைநெறிகளின் பொருட்டு தகவுத்திறன்/ செய்முறை பரீட்சைக்குப் பதிலாக, பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் தொடர்பாக துரிதமாக இணக்கப்பாடுகளை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு மேற்கொள்கின்ற இணக்கப்பாட்டுக்கு பல்கலைக்கழக அனுமதி குழுவினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக்கொண்டவுடன், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை பிரகாரம், பல்கலைக்கழக அனுமதியின் பொருட்டு விண்ணப்பத்தாரிகளுக்க ஆகக்கூடிய மட்டத்தில் வாய்ப்பு கிடைக்கும் வகையில் தகவுத்திறன் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகள் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும். |